FORUM OF UNIONS AND ASSOCIATIONS OF EXECUTIVES/ NON EXECUTIVES OF BSNL

FORUM OF BSNL WORKERS

**தமிழ் மாநிலம்**

**தேதி**:-22.11.2016

# துணை டவர் நிறுவனத்திற்கு எதிராக அனைத்து சங்கங்களின் தர்ணா- 25.11.2016

அன்பார்ந்த தோழர்களே,

BSNLல் உள்ள டவர்களை தனியாக பிரித்தெடுத்து துணை டவர் நிறுவனம் அமைப்பது என மத்திய தொலை தொடர்பு துறை முடிவு செய்துள்ளது. அதற்கான அமைச்சரவைக் குறிப்பு தயார் செய்யப்பட்டு மத்திய தொலை தொடர்பு அமைச்சரின் ஒப்புதலை பெற்று அமைச்சரகங்களுக்கு இடையே சுற்றுக்கு விடப்பட்டுள்ளது. இது முடிவுக்கு வந்தது என்றால் அது BSNL நிறுவனத்திற்கு மிகப்பெரிய ஆபத்தாக மாறிவிடும். தொடர்ந்து வருவாய் இழப்பு அதிகரித்து வந்த நிலையில், BSNLல் பணியாற்றும் அதிகாரிகள் மற்றும் ஊழியர்களின் கடுமையான உழைப்பின் காரணமாக மீண்டெழுந்து வரும் நிலையில், அரசின் இந்த முயற்சியினை எதிர்த்து முறியடிக்க வேண்டியது அவசியம்.

16.11.2016 அன்று BSNL ஊழியர் சங்கமும், NFTE BSNLம் விடுத்த அறைகூவலை ஏற்று நடைபெற்ற அனைத்து சங்கங்களின் கூட்டத்தில் அரசின் இந்த முயற்சியை கைவிட வேண்டும் என வலியுறுத்தி 25.11.2016 அன்று மாவட்ட தலைநகர்களில் தர்ணா நடத்துவது என்று முடிவு செய்துள்ளது. அடுத்த கட்டமாக 15.12.2016 அன்று ஒரு நாள் வேலை நிறுத்த போராட்டமும் நடத்துவதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

25.11.2016 அன்று தமிழகத்தில் அனைத்து மாவட்ட தலைநகர்களிலும் தர்ணா போராட்டத்தை வெற்றிகரமாக நடத்திட வேண்டும் என தமிழ் மாநில FORUMகள் இரண்டும் அறைகூவல் விடுக்கின்றது. மாவட்ட செயலாளர்கள், BSNLல் பணியாற்றும் அனைத்து அதிகாரிகளையும் ஊழியர்களையும் ஒன்று திரட்டி இந்த போராட்டத்தை வெற்றிகரமாக்கிட வேண்டும் என கேட்டுக் கொள்கிறோம்.

வாழ்த்துக்களுடன்,

**தோழமையுள்ள,**

**S.செல்லப்பா**
**அமைப்பாளர்**
FORUM OF BSNL UNIONS AND ASSOICATIONS

**K.நடராஜன்**
**அமைப்பாளர்**
FORUM OF BSNL WORKERS